

# ஜெப வீரர்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** தானி 2:20–23; தானி 6:10,11; அப் 20:36; ஆதி 5:22–24; யாத் 33:15–23; 32:31,32.

**மனன வசனம்:** கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன். அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன். சங் 116:1,2.

உங்களது நெருங்கிய நண்பரிடமோ, வாழ்க்கைத் துணைவரிடமோ நீங்கள் அரிதாகவே பேசுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். மிக விரைவில் அந்த உறவு முறிந்துவிடும், மேலும் அங்கே ஒரு சிக்கல் உருவாகும். அதேபோல, தேவனுடன் ஒரு நெருங்கிய உறவு வைத்துக்கொள்வதற்கு ஜெபம் இன்றியமையாத ஒன்று. அது, நம் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகிற, நம்மைப் பெலப்படுத்தக் கூடிய ஒரு முக்கியமான ஆவிக்குரிய பழக்கம். நாம் அடிக்கடி, தொடர்ந்து ஜெபிக்கா விட்டால், உடனடியாகவோ பிறகோ ஆண்டவரைவிட்டு தூரே சென்றுவிடுவோம்.

வேதாகமத்தில், வெவ்வேறு வழிகளில் ஜெபித்த வெவ்வேறு நபர்களின் வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொள்கிறோம். நாம் அவர்கள் வாழ்க்கையைச் சற்று திரும்பிப்பார்த்து, தேவனுடன் அவர்களுக்கிருந்த நெருக்கம் அவரோடிருந்த உறவில் எவ்வாறு தாக்கம் உண்டாக்கியது என்பதையும், நாம் எப்படி ஜெபிக்கவேண்டும், எதற்காக ஜெபிக்கவேண்டும் என்பதையும், அவர்களின் ஜெபங்கள் மற்றவர்களின் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைத்தன என்பதையும் சற்றே பார்ப்போம். நம் ஜெப வாழ்க்கை நம்மில் மட்டுமல்ல, மற்றவர்களிலும் தாக்கத்தை உண்டாக்குகிறது என்பது உண்மை.

வேத ஆராய்ச்சி போலவே, ஜெபம் எனும் இந்தத் தலைப்பும் மிகவும் பெரியது, முக்கியமானது; வெறும் இரண்டு வாரங்களுக்குள் அடக்கமுடியாத அளவுக்கு மிகவும் விரிவானது. தேவனுடன் வலுவான உறவைப் பேணுவதற்கு ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்பதைத் தங்கள் வாழ்வின்மூலம் நிரூபித்துக் காட்டிய வேதாகம மாந்தர்களிடமிருந்து, சில பாடங்களை இந்த வாரம் நாம் கற்றுக்கொள்வோம். அவர்களது முன்மாதிரிகளிலிருந்து அறிந்துகொள்வோம்.

*2025*, மே 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

# உண்மையுள்ள தானியேல்

வேதாகமத்தின் மிகப்பெரிய ஜாம்பவான்களில் தானியேலும் ஒருவர். அவரது முதல் சம்பவம் நமக்குத் தெரிந்திருக்கும். தானி 1. 'தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டான்'. தானி 1:8. மேலும் தானியேலுக்கும் அவரது மூன்று நண்பர்களுக்கும் 'தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.' தானி 1:17. வேதாகமம் தானியேலை ஞானமுள்ளவர் என்கிறது. தானி 1:20; 2:14, 21, 23, 48. ஏனென்றால், தேவ ஆவியானவர் அவருக்குள் இருந்தார். தானி 4:9, 18; 5:14; 6:3. பரலோகத்திற்குப் பிரியமானவராக இருந்தார். தானி 9:23; 10:11. தேவனுடன் வலுவான, நிலையான பிணைப்பைக் கொண்டிருந்த ஒரு மனிதனைப் பற்றிய சில விவரிப்புகள் இவை

தானி 2இல், பாபிலோனில் இருந்த அனைத்து ஞானிகளையும் கொல்லும்படி ராஜா கட்டளை பிறப்பித்தபோது, ராஜா கண்ட கனவின் அர்த்தத்தை விளக்கும்படி தேவ இரக்கத்திற்காக தானியேல் வேண்டினார். தானி 2:18. ராஜாவின் கனவை தானியேலுக்கு, தேவன் வெளிப்படுத்தியபோது, அவர் உடனடியாக ஜெபித்தார்.

**தானி 2:20-23இல் தானியேல் எதற்காக ஜெபித்தார், அந்த ஜெபத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?**

வருடங்கள் கடந்தன, ராஜாக்கள் போய் ராஜாக்கள் வந்தார்கள், ஆனாலும் தானியேல் ராஜாக்களுக்கு ஆலோசனை கூறுகிறவராக இருந்தார். அவரிடம் ஒரு தனித்துவம் காணப்பட்டதாகச் சொல்லப்படுகிறது; 'தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்' தானி 6:3. 'அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை' தானி 6:4. அவர்மீது அதிக பொறாமைகொண்டு, அவருடன் இருந்தவர்கள் அவருக்கு எதிராக, தீய சதித்திட்டங்களைத் தீட்டினாலும், தானியேல் தன் ஜெபவாழ்வில் தடுமாறாமலும், பயப்படாமலும் இருந்தார். தானி 6:5-9.

**தானியேலைப்பற்றி தானி 6:10,11 என்ன சொல்கிறது?**

தானியேலுக்குச் சிக்கல் உண்டானபோது, அவர் ஜெபித்தார். அவரது உயிருக்கு அச்சுறுதல் ஏற்பட்டபோது, ஜெபிப்பதில் உறுதியாக, எப்போதும் போல ஜெபித்துவந்தார்; அதாவது தன் வழக்கத்தின்படியே தினமும் மூன்று வேளை ஜெபித்தார். அவர் அதை மறைக்கவில்லை; தினமும் மூன்றுவேளை எருசலேமை நோக்கி ஜெபித்ததைப் பலகணி வழியாகப் பார்க்கமுடிந்தது. உடல் பாவனையிலும் அதைக்காட்டினார்; அதாவது முழங்காலிட்டார். மேலும், அவரது ஜெபம் நன்றியினாலும் வேண்டுதலினாலும் நிறைந்திருந்தது.

---

**இதுபோன்ற சம்பவங்கள் இருக்கும்போது, ஜெபிக்காததற்கு நாம் சொல்கிற காரணங்கள் செல்லுபடியாகுமா?**

# ஜெபிக்கும்போது உடல் பாவனை

நம் வாழ்க்கையில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டால், உடனே நமது நெருங்கிய நண்பரை அழைத்து, அதுபற்றிப் பேசுவோம். சந்தோஷமானச் செய்தியையும், யாரிடமாவது பகிர்ந்து கொள்வோம். அதேபோல தேவனிடமும் சொல்லலாம். 'ஒரு நண்பரிடம் பேசுவதுபோல தேவனிடம் மனந்திறந்து பேசுவதே ஜெபம்'.

ஜெபம் நம்மை, தேவனுடன் இணைந்திருக்கச் செய்கிறது; மேலும், நாம் யாருடையவர்கள் என்பதைப் பிசாசுக்குத் தெரிவிக்கிறது. காலையில் நாம் ஜெபிக்க முழங்காலிடும்போது, அன்றைய தினம் நாம் தேவனுக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்திருப்பதை அந்தகாரத்தின் வல்லமைகளுக்கு நம் உடல் மொழிமூலம் தெரியப்படுத்துகிறோம். அதுமட்டுமல்ல, நாம் ஜெபிக்கும்போது தேவன் நமக்கு உதவியாகத் தூதர்களை அனுப்புகிறார், அந்தகாரச் சத்துருவிடமிருந்து நம்மை மூடிப் பாதுகாக்கிறார். சங் 91.

பணிந்து முழங்காலிட்டு ஜெபிக்கும் உடல் ரீதியான செயல், ஒரு தாழ்மையான மனநிலையை வெளிப்படுத்துகிறது. நாற்காலியில் அமர்ந்து அல்லது படுக்கையில் படுத்து ஜெபிப்பதைக் காட்டிலும் இது சற்றே மாறுபட்டது; நிச்சயமாக அத்தகைய நிலைகளிலும் நாம் ஜெபிக்க முடியும். ஆனாலும், நாம் தேவனுக்கு முன்பாக முழங்காலிடும்போது, நம் முழு மனதோடும் அவருக்குச் சேவைசெய்யத் தயாராக இருப்பதைக் காட்டுகிறோம்; மேலும் அவர் சர்வவல்லவர் என்றும், நாம் சிருஷ்டிக்கப்பட்ட அவரது பிள்ளைகள் என்றும் நமது வார்த்தைகள் பறைசாற்றுகின்றன.

**ஜெபிக்கும்போது முழங்காலிட்டு ஜெபித்த தனிநபர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்: தானி 6:10; லூக் 22:41; அப் 7:60; 9:40; 20:36.**

நின்றுகொண்டு ஜெபிப்பது வேதாகமக் காலங்களில் ஒரு பொதுவான வழக்கமாக இருந்தது. 2நாளா 20:5, 6, 13; 1சாமு 1:26; யோபு 30:20; லூக் 18:11, 13. உட்கார்ந்துகொண்டு ஜெபித்ததற்கான உதாரணங்களும் உள்ளன. 2சாமு 7:18. மற்றவர்கள் தேவனுக்கு முன்பாகத் தரையில் முகம் படுமாறு சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தனர்; இந்த நிலை பொதுவாக ஜெபத்தோடு தொடர்புடையதைவிட, மேலான ஒருவருக்கு முன் காட்டப்படும் பணிவைக் குறிப்பதாக இருந்தது. 1இராஜா 1:47, மாற்கு 14:35.

நீங்கள் ஜெபிக்கும்போது உங்களுடைய வழக்கமான உடல்பாவனை என்ன? நாம் ஒரு குறிப்பிட்ட நிலையில்தான் ஜெபிக்கவேண்டும் என்று வேதாகமம் கட்டாயப்படுத்தவில்லை. ஆனாலும், ஜெபிக்கும்போது நம் உடல் இருக்கிற நிலைகள், நமது மரியாதை, உள்ளார்ந்த உணர்வுகள் மற்றும் தேவனிடம் நம்மை ஒப்படைக்கிற விருப்பம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதால் அவை முக்கியமானவை. சிலரால் முழங்காலிட முடியாது; எனவே, இருதயத்தின் நிலையே இறுதியில் மிகவும் முக்கியமானது. உங்களால் முழங்காலிட முடிந்தும், நீங்கள் அவ்வாறு செய்வதில்லை என்றால், அடுத்த முறை ஜெபிக்கும்போது முழங்காலிட்டு முயற்சி செய்து பாருங்கள்; அது தேவனுடன் நீங்கள் செலவிடுகிற நேரத்தில் எவ்வாறு தாக்கத்தை உண்டாக்கிறதெனப் பாருங்கள்.

---

**நாம் 'இடைவிடாமல் ஜெபம்பண்ணவும்', விழிப்புடன் ஜெபிக்கவும், உறுதியாய்த் தரித்திருந்து ஜெபிக்கவும் வேதாகமம் அழைக்கிறது. 1தெச 5:17; கொலோ 4:2; ரோமர் 12:12. இன்று நீங்கள் நிற்கும்போதும், உட்காரும்போதும், படுக்கும்போதும் அல்லது நடக்கும்போதும் தேவனுக்கு நேராக உங்கள் சிந்தையைத் திருப்பி, உங்கள் நண்பரிடம் பேசுவதுபோல அவரிடம் பேசுங்கள்.**

# ஏனோக்கு தேவனோடு நடந்தார், ஜெபித்தார்

**ஏனோக்குபற்றி நமக்குத் தெரிந்த உண்மை என்ன? ஆதி 5:22-24.**

ஏனோக்கின் வாழ்க்கைபற்றி வேதாகமத்தில் அதிக தகவல் இல்லை, ஆனால் அவர் 300 வருடங்கள் தேவனோடு நடந்தார், இறுதியில் தேவன் அவரைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார் என்று சொல்கிறது. தேவன் மீதான நிலையான பக்தி, அவரது வாழ்க்கையை அடையாளப்படுத்துவது அழகானது!

ஏனோக்கு 'ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்திருக்க' வேண்டும். ரோமர் 12:12. அவர் தனது அன்றாட அனுபவங்களின் வழியாக விசுவாசத்தில் தேவனோடு நெருங்கி வளர்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் பூமி மென்மேலும் தீமைநிறைந்ததாக மாறிக்கொண்டிருந்தது; ஏனோக்கு தேவனுக்குச் சேவை செய்வதில் மும்முரமாக இருந்தார், ஆனால் அவரோடு நிலைத்திருக்காமல் அவரால் அதைச் சிறப்பாகச் செய்திருக்க முடியாது.

சுறுசுறுப்பான உழைப்பு நிறைந்த வாழ்க்கைக்கு மத்தியிலும், ஏனோக்கு தேவனோடுள்ள தனது ஐக்கியத்தை உறுதியாகப் பேணி வந்தார். அவருடைய வேலைகள் எவ்வளவு அதிகமாகவும் நெருக்கடியாகவும் இருந்தனவோ, அந்த அளவுக்கு அவருடைய ஜெபங்கள் இடைவிடாததாகவும் ஊக்கமானதாகவும் இருந்தன. மக்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட காலம் தங்கியிருந்து, தனது போதனையாலும் முன்மாதிரியான வாழ்க்கையாலும் அவர்கள் பயன்படும்படி பிரயாசப்பட்ட பிறகு, அங்கிருந்து விலகிச்செல்வார்; தேவன்மட்டுமே வழங்கக்கூடிய அந்த தெய்வீக அறிவிற்காகப் பசியும் தாகமும் கொண்டவராய், தனிமையில் நேரத்தைச் செலவிடுவார். இவ்விதமாக தேவனோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டிருந்ததால், ஏனோக்கு மேன்மேலும் தெய்வீகச்சாயலைப் பிரதிபலிக்கத் தொடங்கினார். பக்தியற்றவர்கள்கூட அவருடைய முகத்தில் தெரிந்த அந்த பரலோகப் பிரகாசத்தை அச்சம் கலந்த வியப்புடன் பார்த்தார்கள்.

நாம் உலகத்திலிருந்து முற்றிலும் விலகி, இந்த உலகிற்கு எந்தப் பயனும் இல்லாத ஒரு துறவியைப்போல அல்லது சந்நியாசியைப்போல வாழவேண்டும் என்று தேவன் நம்மிடம் கேட்பதில்லை. ஏனோக்கைப்போல, நாமும் பயனுள்ளவர்களாகவும், நம்மைச்சுற்றியுள்ளவர்களின்தேவைகளை அறிந்தவர்களாகவும் இருக்கமுடியும்; ஆனால், ஒரு நிலையான மற்றும் ஆழமான உறவின்மூலம் தேவனோடு நடப்பதாலும் அவரோடு பேசுவதாலும்மட்டுமே, அவரால் தமது அற்புதமான குணாதிசயங்களை நம் வழியாகப் பிரதிபலிக்கச் செய்யமுடியும்.

நாம் எப்போதும், எந்த இடத்திலும் ஜெபிக்கலாம். பூமியில் தேவன் நம்மைப் பார்க்கமுடியாத, நம் சத்தத்தைக் கேட்கமுடியாத இடம் எதுவுமில்லை. சங் 139:7-12. நாம் எந்த இடத்தில் இருந்தாலும், அவர் எப்போதும் நம் இருதயங்களின் கூக்குரலைக் கேட்கிறார். புலம் 3:55-57. ஆனாலும், மனதில்மட்டும் ஜெபிப்பதற்குப் பதிலாகச் சத்தமாக ஜெபிப்பதில் ஒரு விசேஷமான பலன் இருக்கிறது. நாம் அமைதியாக ஜெபிக்கும்போது, நம் கவனம் சிதறக்கூடும் அல்லது நம்முடைய எண்ண ஓட்டத்தை அல்லது வாக்கியத்தைக்கூட நாம் முழுமையாக முடிக்காமல் போகலாம்; மேலும் நமது எண்ணங்களை ஒருமுகப்படுத்துவதும் கடினமாக இருக்கலாம். ஆனால், நாம் மெதுவான குரலில் அல்லது நமது இயல்பான தொனியில் சத்தமாக ஜெபிக்கும்போது, தேவன் உண்மையானவர், அவர் செவிகொடுக்கிறார், அவரிடம் பேசுவதற்கு நம்மிடம் ஒரு குறிப்பிட்ட விஷயம் இருக்கிறது என்பதை அது நமக்கே நினைவுபடுத்துகிறது.

இன்று உங்கள் அன்றாட வேலைகளைச் செய்யும்போது, இயேசுவோடு பேசும் வகையில், எங்கே அல்லது எப்படி ஒரு சிறு ஜெபத்தை ஏறெடுப்பீர்கள்?

# மோசே, தேவபக்தியுள்ள தலைவர்

ஏனோக்கு தேவனோடு மிக நெருக்கமான உறவை வைத்திருந்தது தெளிவாகத் தெரிந்தாலும், மோசே வைத்திருந்த உறவைப்பற்றி நமக்கு இன்னும் அதிகமான புரிதல்கள் உள்ளன; அவரோடு மோசே உரையாடிய பல சம்பவங்களை நாம் வேதாகமத்தில் வாசிக்கமுடிகிறது. இந்தத் தாழ்மையான தலைவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளில், அவர் தேவனோடு வைத்திருந்த இடைவிடாத தொடர்பும், நிலையான உறவுமே அவரது வாழ்வின் மிகமுக்கிய அங்கமாக, ஒரு தேவபக்தியுள்ள தலைவராக அவர் வெற்றி பெற்றதன் ரகசியமாக இருந்தது.

**மோசேக்கும் கர்த்தருக்கும் இடையே நடைபெற்ற அந்த உரையாடலின் பொருள் மற்றும் அது நடைபெற்ற விதம் என்ன? யாத் 33:15–23.**

---

தேவனிடம் பேசுவதும், அவரது குரலை அவ்வளவு தெளிவாகக் கேட்பதும் எப்படி இருந்திருக்கும்! இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம் தங்களுக்காக, தேவனிடம் பேசும்படி கெஞ்சினதற்குப் பதிலாக ஏன் தாங்களாகவே தேவனோடு அத்தகைய தொடர்பைத் தேடவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. யாத் 20:18-21. ஆனாலும், அதே மலையில்தான், எரிகிற முட்புதரில் தங்களுக்குள் நடந்த அந்த முதல் சந்திப்பிலிருந்தே, மோசேயை இதற்காக தேவன் ஆயத்தப்படுத்தியிருந்தார். மோசேயின் மற்ற தனிப்பட்ட ஜெபங்களைப்பற்றியும் நாம் வாசிக்கலாம். ஆனாலும், அவர் இடைவிடாமல் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்ததையும், தான் வழிநடத்தின மக்களுக்காக வழிகாட்டுதலைக் கேட்டதையும், அவர்களுக்காகப் பரிந்து பேசியதையும் காணமுடிகிறது.

**இரண்டு தருணங்களில், குடும்ப அங்கத்தினர்களுக்காக மோசே பரிந்துபேசுகிறார். இவ்வாறு பரிந்துபேசுவதற்குக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் என்ன, அந்த இடைவெளியைச் சரிசெய்ய அவர் முயற்சி எடுத்திருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்?**

**ஆரோன்: யாத் 32:1–14, 31–34; உபா 9:20**

**மிரியாம்: எண் 12:13**

மிரியாமுடனான சம்பவத்தில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அவளுடைய மோசமான நடத்தையினாலும் பொறாமையினாலும் பாதிக்கப்பட்டவர் மோசேதான். மிரியாமும் ஆரோனும் தங்களுக்குத் தகுதியான தண்டனையை, தேவனிடமிருந்து பெறுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு மோசே விலகி நின்றிருக்க முடியும். அதற்குப் பதிலாக, அவர் உடனடியாக அவர்களை மன்னித்து, தன் சகோதரி குணமடைவதற்காகப் பரிந்துபேசினார். பாவிகளிடம் தேவன் காட்டும் மன்னிக்கிற கிருபையின் வல்லமையான பிரதிபலிப்பை இங்கே மோசேயின் செயல்களில் காண்கிறோம்.

---

**மத் 5:44ம், கொலோ 3:13ம் சொல்கிறபடி நீங்கள் எவ்வாறு செய்யலாம்? அவ்வாறு செய்வது ஏன் முக்கியமானது?**

---

# மோசே ஒரு தேசத்திற்காகப் பரிந்துபேசுகிறார்

**மோசேபற்றியும் ஜெபம்பற்றியும் யாத் 32:31,32 சுட்டிக்காட்டுவது என்ன?**

மோசே மீண்டும் மீண்டும் தேவனுடைய ஜனங்களுக்காகத் துணிச்சலுடன் பரிந்து பேசினார். மக்கள் தாகத்தோடு இருந்தபோது, தேவனை நாடிச்சென்றார். யாத் 15:25; 17:2-6. பசியோடு இருந்தபோது சென்றார். எண் 11:21,22. முற்றிலும் நம்பிக்கையற்ற நிலையில் இருந்தபோது சென்றார். எண் 11:11-15.

தேவன் இஸ்ரவேல் மக்களுடன் அப்போதுதான் உடன்படிக்கை செய்திருந்தார், ஆனால் அவர்கள் ஒரு பொற்கன்றுகுட்டியைச் செய்து, வழிபட்டார்கள், அப்போது மோசே, 'கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள்மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார்' என்று சொன்னார். உபா 9:19. வாக்குத்தத்தத் தேசத்திலிருந்து ஒற்றர்கள் மோசே திரும்பிவந்தபோது, 'கர்த்தர் உங்களை அழிப்பேன் என்று சொன்னபடியினால், நான் முன்போல் கர்த்தரின் சமூகத்தில் இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன்' என்று நினைவுகூர்ந்தார். உபா 9:25.

ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம் செய்வதற்காக மற்ற கோத்திரத்தாரிடமிருந்து லேவிகோத்திரம் பிரிக்கப்பட்டபோது, 'நான் முந்தின பிரகாரமாகவே நாற்பதுநாள் இரவும் பகலும் மலையில் இருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டு, உன்னை அழிக்காமல் விட்டார்' என்று நினைவுகூர்ந்தார். உபா 10:10. மோசேயின் மன்றாட்டுக்கு தேவன் செவிகொடுத்தார். ஜெபிப்பது, தேவனை உறுதியாகப் பற்றிக்கொள்ளுதல் சம்பந்தமாக மோசேயின் வாழ்க்கையிலிருந்து நாம் அதிகம் கற்றுக்கொள்ள முடியும்:

**தேவன்மீது மோசே ஆழமான அன்பும், அவரது குணம்பற்றி தெளிவான புரிதலும் வைத்திருந்தார்.** யாத் 34:6 தேவன் தம்மைப்பற்றி மோசேக்கு விளக்கி யிருந்தார்: 'கர்த்தர், கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்'.

**வாக்களிக்கப்பட்ட தேசத்தை நோக்கிய அந்தச் சோர்வான பயணத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில், தேவனை மோசே உறுதியாகப் பற்றிக்கொண்டார்;** துணிச்சலோடும், உண்மையோடும் செயல்பட்டார். நாம் அனைவரையும் போல போராட்டங்கள் இருந்தாலும், மோசே தனது வாழ்க்கையில் தேவனு டைய வல்லமை, பிரசன்னம் மற்றும் வழிநடத்துதலின்மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார்.

**தேவனிடம் மோசே அவரது உடன்படிக்கையை நினைவுபடுத்திப் பேசினார்.** யாத் 32:13. தம் மக்களுக்காக, தேவனுடைய வாக்குறுதிகளை உரிமைகோரினார். உபா 7:8. கடந்தகாலத்தில் தேவன் வழிநடத்தியதை நினைவுகூர்ந்தார். உபா 8:2.

**மோசே தனது ஜெபங்களுக்கு தேவன் அளித்த பதில்களை, அவை 'ஆம்' என்றாலும் சரி அல்லது 'இல்லை' என்றாலும் சரி, அப்படியே ஏற்றுக்கொண்டார்.** தேவனுடன் நெருக்கமான உறவில் இருப்பதால்மட்டுமே நாம் கேட்பதெல்லாம் எப்போதுமே நமக்குக் கிடைத்துவிடும் என்று அர்த்தமல்ல. உபா 3:23-29; ஆனாலும், நாம் சோர்ந்து போகாமல், உறுதியுடன் தொடர்ந்து ஜெபிக்கவேண்டும். லூக் 18:1-8.

---

**இப்போது நீங்கள் யாருக்காகப் பரிந்துபேசி ஜெபிக்கவேண்டியுள்ளது? இப்போதே அந்த ஜெபத்தை நீங்கள் ஏறெடுப்பதற்குத் தடையாக இருப்பது என்ன?**

# மேலும் படிக்க:

'அடிப்படையில், நாம் தேவனை மிகவும் நேசிப்பதால் ஜெபிக்கவேண்டும், நம் வாழ்க்கையின் மகிழ்ச்சி, "வெற்றிகள்", சுமைகள், கவலைகள், வேண்டுதல்கள் அன்றாடத் தேவைகள் என அனைத்தையும் அவரோடு பகிராமல் இருக்கமுடியாது. 'தேவனுக்கு அருகாமையிலேயே நாம் இருக்கவேண்டும். அப்போது, எதிர்பாராத துன்பம் வந்தால், சூரியனைநோக்கிப் பூக்கள் திரும்புவதுபோல, நம் சிந்தனைகள் தானாகவே தேவனைநோக்கித் திரும்பும். உங்கள் தேவைகள், சந்தோஷங்கள், துக்கங்கள், கவலைகள், பயங்கள் எல்லாவற்றையும் தேவனுக்கு முன்பாக வையுங்கள். உங்கள் பாரத்தைக்குறித்து அக்கறை இல்லாமல் இருப்பதில்லை. நம் துன்பங்களால் அவர் உள்ளம் உருகுகிறது. கஷ்டம் என்று நாம் வாய் திறந்தால் போதும், அவருடைய அன்பின் இதயம் வேதனைப்படுகிறது. மனதைத்திகைக்கவைக்கிற எல்லாவற்றையும் அவரிடம் எடுத்துச்செல்லுங்கள். அவரால் தாங்கமுடியாதது எதுவுமே இல்லை; அவர் உலகங்களையே தாங்குகிறாரே. பிரபஞ்ச நிகழ்ச்சிகள் அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டில் தானே உள்ளன. நமக்குச் சமாதானம் தருவது மிகச்சிறிதானாலும், அவர் பார்வையிலிருந்து தப்புவதில்லை. அவரால் கவனிக்க இயலாத அளவிற்கு நம் வாழ்க்கையின் எந்தப் பகுதியும் இருட்டில் இல்லை; அவரால் தீர்க்க இயலாத அளவிற்குச் சிக்கலான குழப்பம் எதுவும் இல்லை. நம் பரமபிதாவுக்குத் தெரியாமல், அவர் பிள்ளைகளில் மிகச்சிறியவரைக்கூட எந்த ஆபத்தும் அணுகமுடியாது; எந்தக் கவலையும் சித்திரவதைச் செய்யமுடியாது. மேலும், உங்கள் சந்தோஷ ஆரவாரமும் அவருக்குத் தெரியும்; உதடுகளின் உண்மையான ஜெபமும் தெரியும். ... அவருடைய உன்னிப்பான கவனிப்பைப் பகிர்ந்துகொள்ள வேறொருவர் பூமியில் இல்லாததுபோல ஒவ்வொருவரையும் கவனிக்கிறார்; உங்கள் ஒருவருக்காகவே அவர் தம் பிரியகுமாரனைக் கொடுத்ததுபோல நடந்துகொள்கிறார்'.1

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *உங்களைப் பொறுத்தவரை ஜெபம் அருமையானதா அல்லது பாரமானதா? உங்களுடைய அந்தக் கண்ணோட்டத்திற்குக் காரணம் என்ன?*
2. *மேலுள்ள மேற்கோளில் அர்த்தமிக்க உட்கருத்துக்கள் பல உள்ளன. எந்தக் கருத்து உங்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது?*
3. *இந்த வாரம் நாம் படித்த மூன்று வேதாகம நபர்களில் (தானியேல், ஏனோக்கு மற்றும் மோசே), யாருடைய ஜெப வாழ்க்கை உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறது, ஏன்?*

**பாடச்சுருக்கம்:** வேதாகமத்தின் மாபெரும் ஜெப வீரர்களைப்பற்றி வாசிக்கும்போது, தேவனோடு அவ்வளவு நெருக்கமான உறவை நம்மால் வைக்கமுடியாது என்றோ, அவ்வளவு அர்ப்பணிப்புடன் நம்மால் இருக்கமுடியாது என்றோ நினைப்பது எளிது. ஆனால், நம்மால் அது முடியும். தானியேலைப்போல, எதிர்ப்புகள் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் முழங்காலிட்டு உறுதியாகவும் உண்மையோடும் நம்மால் இருக்கமுடியும். ஏனோக்கைப்போல, தேவன் நமக்குக் கொடுத்த வேலையைச் செய்வதற்கு முன்பாக அவரிடம் திரும்பி, அவரோடு நடப்பதையும் பேசுவதையும் நாம் தேர்ந்தெடுக்க முடியும். மோசேயைப்போல, நம்மை வழிநடத்துபவரும் நண்பருமான சர்வவல்லவருடைய நிழலில் தங்கியிருக்க நாம் முடிவெடுக்கும்போது, நம் குடும்பங்களுக்காகவும் சமூகத்திற்காகவும் பரிந்துபேசி, நம் வட்டத்தில் உள்ளவர்களை நல்வழிப்படுத்த முடியும்.

# ஷூகாவிற்குப் பதிலாகக் கால்சட்டை

கென்யாவைச் சேர்ந்த மாசாய் இன சிறுவனான ரோம்பாஸிடம், செவந்த்—டே அட்வென்டிஸ்டுகள் பிசாசை வணங்குபவர்கள் என்று அந்தப் போதகர் கூறியிருந்தார். மேலும், அட்வென்டிஸ்டுகள் சனிக்கிழமைகளில் ஆலயத்திற்குள் திரும்பி நின்றுகொண்டு உள்ளே செல்வார்களென்றும், ஆடைகள் ஏதுமின்றி வழிபடுவார்களென்றும் சொல்லியிருந்தார்.

தனக்கு 16 வயது இருக்கும்போது, அந்தப் போதகர் சொன்னது உண்மைதானா என்று கண்டறிய ரோம்பாஸ் முடிவு செய்தார். ஒரு சனிக்கிழமை அதிகாலையில், அவர் தனது கிராமத்திலிருந்து பல மைல் தொலைவில் இருந்த ஓர் அட்வென்டிஸ்ட் ஆலயத்திற்கு நடந்து சென்றார். தேவாலயத்திற்கு அருகிலிருந்த மலைப்பகுதிகளில் மறைந்துகொண்டு அங்கு நடப்பவற்றைக் கவனித்தார். சிறிது நேரத்தில், முதல் நபர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் பின்னோக்கி நடக்கவில்லை, அவர் நிர்வாணமாகவும் இல்லை. அந்த மனிதர் நல்ல சட்டையும், கழுத்துப்பட்டையும் அணிந்திருந்ததைக் கண்டு ரோம்பாஸ் ஈர்க்கப்பட்டார். தானும் அதுபோல சட்டையும் கழுத்துப்பட்டையும் அணிய விரும்பினார். அவர் பாரம்பரிய மாசாய் ஷூகா அணிந்திருந்தார், அது ஒரு அரை நிர்வாண ஆடை; கருப்பு கோடுகளுடைய சிவப்பு துணிதான் ஷூகா. பின்னர் போதகரும் மற்ற சபை உறுப்பினர்களும் வந்தனர். அவர்களும் ஆலயத்திற்குள் பின்னோக்கிச் செல்லவில்லை, மேலும் அவர்கள் அனைவரும் நேர்த்தியாக உடை அணிந்திருந்தனர். தொடர்ந்து, ஆலயப் பாடற்குழுவினர் பாடத் தொடங்கினர். 'என் பாவம் தீர்ந்த நாளையே' என்ற பாடலின் வரிகள் ரோம்பாஸின் காதுகளில் விழுந்தபோது, அவரால் அங்கு நிற்கமுடியவில்லை. ஆலயத்தை நோக்கி நடந்தவர், கடைசி வரிசையில் அமர்ந்து மிகுந்த ஆர்வத்துடன் கவனித்தார்.

பிரசங்கம் முடிந்த பிறகு, ஒரு வாலிப வெள்ளைக்காரர் அவரை அணுகினார். அவர் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு ஊழியப்பணியாளர். அவரை ரோம்பாஸ் இதற்கு முன்பு பார்த்ததில்லை, அதற்குப் பிறகும் பார்த்ததே இல்லை. அந்த நபர் ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் அவரிடம் பேசினார். 'இவை உனக்கான கால்சட்டைகள்,' என்று கூறி, பல பைகளை உடைய ஒரு கால்சட்டையை ரோம்பாஸிடம் கொடுத்தார்.

ரோம்பாஸ் மிகுந்த உற்சாகமடைந்தார்! அவர் அதுவரை ஒரு கால்சட்டைகூட அவருக்குக் கிடைத்ததில்லை. அவர் அதை அணிந்துகொண்டு, அது நழுவாமல் இருக்கத் தனது 'ஷூகா' துணியைக் கிழித்து ஒரு பெல்ட் போலக் கட்டிக்கொண்டார்.

வீட்டிற்குத் திரும்பியபோது, அந்த மாசாய் சிறுவன் கால்சட்டை அணிந்திருப்பதைக் கண்டு அவருடைய 82 சகோதர சகோதரிகளும் ஆச்சரியப்பட்டனர். அவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, 'என்ன நடந்தது?' என்று கேட்டனர்.

ரோம்பாஸ் அந்த விலையுயர்ந்த கால்சட்டையை அன்று இரவு தனது படுக்கைக்கு அடியில் வைத்தார். அடுத்த ஓய்வுநாளில் மீண்டும் தேவாலயத்திற்குச் சென்றபோதுமட்டுமே அதை அணிந்தார். ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அவர் கால்சட்டை அணிவது அவரது கிராமத்துக் குழந்தைகள் மற்றும் பெண்களின் கவனத்தை ஈர்த்தது. அவர்களில் சிலர் அவரைப் பின் தொடர்ந்து ஆலயத்திற்கு வரத் தொடங்கினர்.



பல மாதங்கள் கடந்தன. ரோம்பாஸும் அவரது தாயாரும் ஒரே நாளில் ஞானஸ்நானம் எடுத்துத் தங்களை இயேசுவிடம் ஒப்படைத்தனர்.